தடுக்கி விழுந்தோரை தாங்குகிறீர்
தாழ்த்தப்பட்டோரை தூக்குகிறீர் (2)
தகப்பனே தந்தையே
உமக்குத் தான் ஆராதனை (2)
-தடுக்கி விழுந்தோரை

போற்றுதலுக்குரிய பெரியவரே
தூயவர் தூயவரே (2)
எல்லாருக்கும் நன்மை செய்பவரே
இரக்கம் மிகுந்தவரே (2)
உம் நாமம் உயரணுமே,
அது உலகெங்கும் பரவணுமே
-தகப்பனே தந்தையே

உம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும்
அருகில் இருக்கின்றீர் (2)
கூப்பிடுதல் கேட்டு குறை நீக்குவீர்
விருப்பம் நிறைவேற்றுவீர் (2)
உம் நாமம் உயரணுமே,
அது உலகெங்கும் பரவணுமே
-தகப்பனே தந்தையே

உயிரினங்கள் எல்லாம் உம்மைத்தானே
நோக்கிப் பார்க்கின்றன (2)
ஏற்றவேளையில் உணவளித்து
ஏக்கமெல்லாம் நிறைவேற்றுவீர் (2)
உம் நாமம் உயரணுமே,
அது உலகெங்கும் பரவணுமே
-தகப்பனே தந்தையே

அன்பு கூரும் எங்களை அரவணைத்து
அதிசயம் செய்கின்றீர் (2)
பற்றிக் கொண்ட யாவரையும் பாதுகாத்து
பரலோகம் கூட்டிச் செல்வீர் (2)
உம் நாமம் உயரணுமே,
அது உலகெங்கும் பரவணுமே
-தகப்பனே தந்தையே